Softview™
Visual Communication

# வேர்கள்

விதை : 2 சாஃப்ட்வியூ இதழியல் மாணவர்களின் பயிற்சி இதழ் வேர் : 1




## ஆடைகள் அழகுற...

**ஆடை வடிவமைப்பு துறையின் வளர்ச்சி இன்றைய இளைஞர்களுக்கு புதிய கதவுகளைத் திறக்கிறது**

கண்ணைக் கவரும் ஆடைகளோடு சினிமாத்துறையினர் வரும்போது நாம் ஆச்சர்யத்தில் மூழ்குவோம். ஆனால், அதன்பின்னிருக்கும் ஆடைவடிவமைப் பாளரின் உழைப்பு என்னவென்பது சமீபத்தில் சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்ற 'லைட்ஸ் ஆன்' என்ற நிகழ்ச்சியில் தெரியவந்தது. இந்த நிகழ்ச்சியின் நோக்கமே திரைக்கு பின்னால் இருக்கும் கலைஞர்களை வருங்கால தலைமுறையினருக்கு வெளிச்சம் போட்டு காட்டுவதுதான். இந்த நிகழ்ச்சியில் பிரபல ஆடைவடிவமைப்பாளர் நளினி ஸ்ரீராம், தனது கலைத்துறை அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

“நான் சினிமாவிற்கு வந்ததன் முழுமுதற் காரணமே மணிரத்னம் சார்தான். ஒருமுறை அவர் என்னுடைய உறவினர் வீட்டிற்கு படப்பிடிப்பிற்காக வந்தபோது. என்னிடம் இரண்டு வெள்ளை துணி எடுத்து வரச் சொன்னார். அது தான் என் முதல் வேலை. அதன்பின் அவருடைய பம்பாய் படத்தின் மூலம் சினிமாவிற்குள் நுழைந்தேன்” என்று தான் அறிமுகமான விதம் குறித்து தெரிவித்தார். அவர் பேசும்போது ஆடை வடிவமைப்பு செய்த படங்களின் சிறப்புக் காட்சிகள் திரையிடப்பட்டு அதிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டது. நிகழ்ச்சியின் வர்ணனையாளராக வந்த நடிகை ரோகிணியும், நளினியும் சேர்ந்து முன்னரே ஒத்திகை செய்தது போல நிகழ்ச்சி கச்சிதமாக அமைந்தது. ”நான் இத்தனை படங்கள் செய்திருந்தாலும் அசோகா என்ற படத்திற்கு காஸ்டியூம் டிசைன் செய்கிறேன் என்று டைரக்டர் சந்தோஷ் சிவனிடம் கேட்டபொழுது 'நீ எதற்கு? அதையெல்லாம் என்னுடைய அசிஸ்டெண்டே செய்து விடுவார்கள். நீ தேவையில்லை” என்று சந்தோஷ் சிவன் கூறியதாகத் தெரிவித்தார். அப்போது இவரது வெளிப்படையான பேசும்குணம் கண்டு அரங்கமே அதிர்ச்சியில் ஆழ்ந்தது. இந்த விஷயத்தில் நளினி, கலைஞர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய முன்னுதாரணம். இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களில் பலரும் சினிமாத் துறையினர்தான். இயக்குனர் தரணி, கலை இயக்குனர் தோட்டா தரணி, நடிகை லைலா, இயக்குனர் வின்சென்ட் செல்வா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இயக்குனர் தரணி, ”ஆடை தயாரிப்பாளர்கள் என்றால் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். அதை நீங்கள் எப்படி சமாளிக்கிறீர்கள்?” என்று கேட்டபோது நளினி கூறிய பதில். “இதை கண்டிப்பாக சமாளித்துத் தான் ஆக வேண்டும். இல்லையென்றால் நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது. ஆனால் இந்த விஷயத்தில் எனக்கு பல உதவிகள் செய்பவர்கள் அசிஸ்டெண்ட் டைரக்டர்கள் தான். டைரக்டர் திடீரென்று போன் பண்ணி என்னம்மா டிரெஸ்ஸெல்லாம் ரெடியா? ஷூட்டிங் ஆரம்பிக்கலாமா? என்பார். ஆனால் அசிஸ்டெண்ட்ஸ் செட்டு காய்வதற்கே ஒரு வாரம் ஆகும் என்பார்கள். இந்த விஷயத்தில் மட்டுமல்ல. பல ஆலோசனைகளும் தருவார்கள். நான் பலமுறை அவர்களுடைய ஆலோசனைகளை கேட்டிருக்கிறேன்” என்றார்.




டிசைனர்கள் என்னதான் வடிவமைத்தாலும், அதில் அவர்களின் முழு கற்பனை வெளிப்படாது. ஏனென்றால் ஒரு படத்தின் இயக்குனருக்கு ஒரு கலர் பிடிக்கும். கதாநாயகனிற்கு ஒரு கலர் பிடிக்கும். இதெல்லாம் ஓ.கே. ஆனவுடன் ஒளிப்பதிவாளர் “இந்த கலர் இருந்தா சரியா வராது” என்று அவரது எண்ணத்தைச் சொல்வார். இவர்கள் எல்லோரையும் திருப்திப்படுத்தும்போது டிசைனருடைய தனித்தன்மை கண்டிப்பாக பாதிக்கப்படும் என்று வேலையின் சிக்கல்களைத் தெரிவித்தார். ஒரு படத்திற்கு ஆடைவடிவமைப்பு செய்ய எவ்வளவு காலம் எடுத்துக்கொள்வீர்கள் என்று கேட்டபோது, “நேரமா? அதெல்லாம் கிடையாது நைட் போன் பண்ணி காலையில் டிரஸ் வேண்டுமென்பார்கள். அதற்கெல்லாம் காஸ்ட்யூம் டிசைனர் ஈடுகொடுக்கவேண்டும்” என்று தடாலடியாகச் சொன்னார். 'சரித்திரப் படத்திற்கு காஸ்டியூம் டிசைன் செய்வேண்டும் என்பதே நளினியின் நீண்ட நாள் கனவு. அவரது கனவு விரைவில் நிறைவேற நம் வாழ்த்துக்கள்.

- அருண். பா,

- சபரிசித்ரா.மா

## JOBS DB: NOTCHES HIGH…

Employment in our society seems to be a thing of the past; but if only you can see? They warn the up-and-coming generations this way, they who are muddled up between stereotype governmental positions and modern day job markets. They forget that permanence in jobs is not a private property of governments. They also forget, in a general vein hence, that employment these days is not about employment bureaus or classified in the Newspapers… The fact is more jobs lie outside these blindfolded searches and aimless dejections after a few interviews. Jobsdb.com (DB for database) testifies, over eleven million resumes in their database, in eleven countries-nine Asian countries and one virtual office in the U.S-including India, they have in fact reversed the job-seeking process.

**Confidentiality**

Companies and Corporate Houses, which pay for jobsdb's service, only with the permission of the company can have access to the bio-data of job-seekers; and if satisfied, once again only with the permission of the JOBSDB, can it retrieve information about or contact a particular job-seeker. "We entered India only six years ago in 1998," says Mr. Guhan country Manager, JOBSDB. "We have four centers in India, the other three being at Bangalore, Hyderabad and Pune. The applicants can post a Curriculum Vitae, which carries most required details online. But this is where we fit in: confidentiality has been our strength. Companies, which hire us or go through us, for their recruitment base are screened. At any stage they cannot haphazardly contact a job-seeker. To check the bio-data, to get more details and then to get the correspondence, they have to go through us," he says.



Mr. Guhan

**Viability**

However the company recognizes that in a country like ours there are bottlenecks. The awareness of such an online methodology must be duly suffused. For this purpose, the company has begun tie-ups with some colleges as the ingress-step and is intending to spend a lot more on promoting awareness about its services. But that is only at a general level. At a more specific level, jobsdb.com, Mr. Guhan says, is not merely a liaison between job-seekers and corporate houses or people who generate jobs. "It's also about knowing your personality best," he cites. "In today's world more than your diplomas and degrees, your personality matters. And personality is a prerequisite for everyone-for a homemaker and a house manager. We have a programme, more a product, called Drake."

Drake is a U.S-based product which empowers a person to test himself in three minutes. While this is available online as well as face-to-face, the latter is preferred. A person is given a sheet, wherein he'll be assigned some work or asked simple questions, only a simple layman's task, which he should be able to do in a couple of minutes. A report would then be given about his personality. "This is approach-based," quotes Mr. Guhan. "Your approach to simple situations determines your personality." The company is all set to release this product and promote awareness among school and college students. "Self-learning is the only criticism, which hones people here," he says.

**The time, work and place:**

Headquartered in Hong Kong, jobsdb.com, has tie-up with various companies, which use the website as agent for their recruitment process. However, though all kinds of jobs are advertised in the website, software companies predominate. Also, the website lists provide, to all its browsers, opportunities available in all the eleven countries, where jobsdb has branches. This apart, the website keeps weekly and monthly tabs on the job market. "You can't advertise what was the situation two months ago now," Mr. Guhan says. The job market changes rapidly.

**The Hierarchy:**

Talking of the hierarchy, Mr. Guhan explained it to be fairly general. While calling the IT Department, which plays the most significant role in maintaining tens of thousands of CVs, the spine of the organization, answering to a query, he added that Customer Support Department also must play-and does play-a very crucial role in any work concerning employment at any given time. He added that there is also a Sales Department, whose duty is to create awareness of new products or software such as Dimension, Drake etc., and a Human Relations wing, as well.

While concluding, Mr. Guhan said, "The biggest failing with many young men is that they are not really keen job-seekers: they either get easily worn down or don't wait for the right jobs. If they knock two doors, they feel despondent. My advice is just four words: knock the next door…One door closes, for something else is likely to open. And I do not say this because, I'm in this chair and in this place: but there is really an abundance of jobs, if one only knows to change with changing times and learns with avidity."

**-Srinivas**